வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : **12/2025**

எனது இல : **NP/07/10/01/188**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்,
2025.04.24

செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு,
மாகாணக் காணி ஆணையாளர்,
மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

வடக்கு மாகாண நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் NP/05/01/LDE/L.GEN/020 இலக்க, 2025.03.06ம் திகதிய கடிதம் மூலமான கோரிக்கைக்கமையவும் G/NPC/A14/Land/CO/App/2024 இலக்க, 2024.11.12ம் திகதிய கடிதம் மூலம் கிடைக்கப்பெற்ற கௌரவ ஆளுநரின் அனுமதிக்கமைவாகவும், வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கமைய, இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளுமுடைய வடக்கு மாகாண காணி வெளிக்கள போதனாசிரியர் பதவியில் கடமையாற்றுபவர்கள் விண்ணப்பிக்க முடியும். இவ் ஆட்சேர்ப்புக்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் 2025 ஜீன் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 20.05.2025 ஆகும்.

**2.0 ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-**

2.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட **குடியேற்ற உத்தியோகத்தர்** சேவையின் 2017.01.01ல் இருந்து வலுவலுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30**ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

2.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமை தகுதிகாண் கால அடிப்படையில் **குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த பதவியின் தரம் III இற்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

2.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

2.4 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **எட்டு (08)** ஆகும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். இப்பதவிக்கு 2024.12.31ம் திகதியில் உள்ளவாறான **50%** வெற்றிடங்கள் **(08 வெற்றிடங்கள்)** மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

2.5 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

## 3.0 சம்பள அளவுத்திட்டம் :-

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2025**க்கு ஏற்ப குடியேற்ற உத்தியோகத்தர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **52,250 – 10 x 800 - 11 x 1190 - 10 x 1320 – 10 x 1350 – 100, 040/-** ஆகும்.

## 4.0 பொதுவான தகைமைகள் :-

4.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

4.3 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பின் போது **உச்ச வயதெல்லை** ஏற்புடையதல்ல.

## 5.0 கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-

### அ) கல்வித் தகைமைகள் :-

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம் / எண்கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

### ஆ) தொழில்சார் தகைமைகள்:-

குண்டசாலை, வவுனியா, அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப கல்லூரி ஆகிய யாதாயினும் ஒன்றில் பெறப்பட்ட இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத விவசாய டிப்ளோமா அல்லது அதற்கு சமனான டிப்ளோமா தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

மூன்றாம்நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட யாதாயினுமொரு நிறுவனம் ஒன்றிலிருந்து குறித்த துறையுடன் தொடர்புடையதான தேசிய தொழில்த் தகைமை மட்டம் - 06 (N.V.Q Level - 06) இனை விண்ணப்பதாரி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

### இ) சேவை அனுபவம் :-

மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களத்தின் காணிவெளிக்களப் போதனாசிரியர் தரம் III பதவியில் **பத்து** (10) வருடங்கள் சேவை அனுபவத்தை விண்ணப்பதாரி கொண்டிருக்க வேண்டுமென்பதுடன், நியமனத் திகதிக்கு உடன் முன்னதாக குறைந்த பட்சம் **ஐந்து (05)** வருடங்களுக்கு முனைப்பானதும் மற்றும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 6.0 ஆட்சேர்ப்பு முறை :-

6.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம் தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும்.

6.2 மேற்படி பதவிக்கு விண்ணப்பித்து தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, திணைக்களத்தில் நிலவும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொண்ட மொத்தப்புள்ளிகளின் உயர் புள்ளி ஒழுங்கில் தெரிவு செய்யப்படுவர்.

## 7.0 பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500.00ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 8.0 விண்ணப்பிக்கும் முறை :-

8.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை 2025.05.14ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கைமூலத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

8.2 விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/188 - 2025"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

8.3 இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத்தலைவர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் சிபார்சு செய்யாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.4 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். எவ்வாறாயினும், **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படுதலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

8.5 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம். என்பதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் ஊடாக அறிவிக்கப்படும்.

8.6 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி கீழ்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: **021 221 9939** / தொலைநகல் இல: **021 221 9940** / மின்னஞ்சல்: **examppscnp@gmail.com**)

- கோரிக்கைக் கடிதம்.
- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.
- அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## 9.0 ஆள் அடையாளத்தை நிருபித்தல் :-

பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சையின் போது நேர்முகப்பரீட்சைச்சபை திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிருபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிருபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை நேர்முகப்பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமையானது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். நேர்முகப்பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீசை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண பொதுச் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

இக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையானது கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கியதாகவிருக்கும்.

| இல | தெரிவு செய்யும் முறை | புள்ளிகள் | குறிப்புக்கள் |
|---|---|---|---|
| 01 | சேவை அனுபவம் மற்றும் முதுநிலை | 90 | முனைப்பானதும் மற்றும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தின் ஒவ்வொரு வருடத்திற்கும் ஐந்து (05) புள்ளிகள் வீதம் வழங்கப்படும். மேலும் இவ் முனைப்பானதும் மற்றும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் ஆறு மாதங்களுக்கு மேற்பட்டதாகவும் ஆனால் ஒரு வருடத்திற்கு குறைந்ததாகவும் காணப்படின் அதற்கு இரண்டரை (2.5) புள்ளிகள் வழங்கப்படும். எவ்வாறாயினும் ஆறு மாதங்களுக்கு குறைந்த மேற்படி சேவைக்காலத்திற்கு புள்ளிகள் எவையும் வழங்கப்படமாட்டாது. |
| 02 | நேர்முகப் பரீட்சை | 10 | மனப்பாங்கு, நேர்முகத் தேர்வை அணுகும் விதம் மற்றும் பதிலளித்தல். |
| | **மொத்தம்** | **100** | --- |

13. இப் பதவிக்கான நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது **வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமாக இறுதித்** தீர்மானம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

14. இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**கவனிக்கவும்:-**

i. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

ii. இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

iii. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

iv. இவ்வறிவித்தலை தங்களது அமைச்சு / திணைக்களத்தில் கடமையாற்றும் மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர் பதவியிலுள்ள உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டு வரவும்.

**பொ.குகநாதன்**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*2025.04.24*

பொ.குகநாதன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்